## ஹிந்தி எதிர்ப்புப் போர் தளகர்த் தர்கள் வருகை.

### தமிழ்காப்புப் போருக்கு வேலூரில் சர்வாதிகாரக் கமிட்டி.

### பொதுக்கூட்டத்தில் தமிழ்ப் பெருந் தலைவர்கள் வீரமுழக்கம்

(ஒரு நிருபர்)

வேலூர், ஜூன் 4

தோழர்கள் ஈ. வெ. ராமசாமிப் பெரியாரும், ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்களும் கொச்சின்எக்ஸ்பிரசில் வந்து 6-15 மணிக்கு வேலூர் ஜஸ்டிஸ் ஆபீசுக்கு வந்து சேர்ந்தார்கள். ஜஸ்டிஸ் சுயமரியாதை, ஹிந்தி எதிர்ப்புத் தோழர்களாலும் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டார்கள். பிறகு எல்லோரும் புடைசூழ என்ஜினீயர் சுப்பராய செட்டித் தெருவில் உள்ள நீலகிரி ஹவுஸை அடைந்தார்கள். அங்கு மாலை 3 மணி வரையில் பலர் வந்து தலைவர்களைக் கண்டு பேசினார்கள்.

பிறகு அங்கிருந்து எல்லோரும் புடை சூழவும் ஆதிதிராவிட சமூக தோழர்களால் ஈ. வெ. ராவுக்கு ஜே! தமிழ் வாழ்க! ஹிந்தி வீழ்க! என்று கோஷிக்கப்பட்டு ஜஸ்டிஸ் ஆபீஸை அடைந்தார்கள். சென்னையிலிருந்து தோழர் கே. எர். பால சுப்பிரமணியம் அவர்கள் 3 மணிக்கு வந்துசேர ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டி நியமிக்கக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. திருப்பத்தூர், ஆம்பூர், பள்ளிகொண்டை, போளூர், கண்ணமங்கலம் முதலிய ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 250க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்து குழுமினார்கள்.

#### கமிட்டி நியமனம்.

கூட்டத்திற்கு தோழர் ராமானுஜ நாயகியம்மையார் தலைமை வகித்தார். ஈ. வெ. ரா. அவர்கள் ஹிந்தியால் வரும் கேடுகளைப்பற்றியும் அதை நுழைப்பதின் நோக்கத்தையும், சூழ்ச்சியையும் அதைத் தமிழர்கள் தடுக்க மேற்கொண்ட போரின் முறையையும் கூறியபிறகு, ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டி நியமிக்கப் பட்டது. கமிட்டியாரும், சத்தியாக்கிரகத் தொண்டர்களும் நடந்துகொள்ள வேண்டிய முறையை ஈ. வெ. ரா. விளக்கிக் கூறினார்கள். அக்கூட்டத்திலேயே ஹிந்தி சத்தியாக்கிரகத்திற்கு ரூ. 94-0-0ம் 1-½ மூட்டை அரிசியும வசூலாயிற்று இக் கூட்டம் 5-45-க்கு முடிய அங்கிருந்து ஜே! கோஷத்துடன் கோட்டை மைதானத்துக்குச் சென்றது.

#### போதுக்கூட்டம்.

பொதுமக்கள் ஏராளமாகக் கூடியிருந்தார்கள். கூட்டத்தில் 5000 பேர்களுக்கு மேல் குழுமியிருந்தார்கள். கூட்டத்திற்குத் தோழர் ராமானுஜ அம்மையார் தலைமை வகித்து தான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவரல்லவாயினும், தான் கற்றது சிறிது தமிழேயாயினும் தமிழ் இனிமை, எளிமை, கலைகள் நிறைந்ததென்றும், அத்தகைய தமிழைக்காக்க எல்லோரும் ஜாதி, மதம், கொள்கை பேதமற்று உயிரைக் கொடுத்தேனும் ஹிந்தியைத் தடுக்க வேண்டும் என்று முகவுரையாகக் கூறியமர்ந்த பிறகு தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் ஹிந்தி கட்டாயப் பாடத்திற்குக்கனம் ஆச்சாரியார் கூறும் காரணங்களை ஒவ்வொன்றாகக் கூறி அவைகளின் பொறுப்பும், நியாயமுமற்ற தன்மையைப் பொதுமக்களுக்கு நன்றாக விளக்கிக் கூறி ஹிந்தியைத் தடைசெய்ய வேண்டிய முறையையும் விளக்கிக் கூறி காங்கரஸ்காரர் கேட்ட கேள்விக்கு ஆணித்தரமாகப்பதிலளித்தார். சில காங்கரஸ் காலிகள் காந்திக்கு ஜே போட்டும், கூட்டத்தில் கல் எறிந்தும் கூட்டத்தைக் கலைக்க முயற்சித்தார்கள். ஆனால் முடியவில்லை போலீஸ் மிகவும் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டது.

#### ஈ. வே ரா ஆவேசம்.

பிறகு தோழர் ஈ. வெ ரா, அவர்கள், தான் இந்தியைப்பற்றி மாத்திரம் பேசுவதாக இருந்தார் என்றும், ஆனால் காங்கரஸ் காலித்தனம் செய்ததால் காங்கரஸ் வண்டவாளங்களை மிகவும், விளக்கமாகவும், உருக்கமாகவும், ஆவேசத்துடனும் சுமார் 2மணிநேரம் பேசினார். பொது ஜனங்கள் கரகோஷம் செய்தும், "ஹியர், ஹியர்" என்றும் இடை இடையே கூற கூட்டம் மிகவும் சிறப்பாக நடந்தது.

## ஸ்டாலின் ஜெதீசன் செய்தி.

சென்னை, ஜூன் 5.

**நண்பர்களே! உறவினரே!!**

இன்றோடு (5-6—38) உண்ணா நோன்பு 36 நாள் ஆகிறது. மயக்கம், களைப்பு, இளைப்பு வயிற்றில் வலி, தூக்கமின்மை முதலிய உபாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் எனக்கு ஊக்கமும் மனவுறுதியும் குறையவில்லை. ஆயினும் 5 நாட்களுக்கு மேல் இந்த பூத உடலோடு இருப்பேனா என்கிற ஐயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. எனது உயிர்த் தோழர்களும், உறவினரும், ஏனைய சகோதர சகோதரிகளும் என்னைக்காண விருப்பமுள்ளவர்கள், இதற்குள் வந்து கண்டு கொள்ளலாம். நேற்று (4-6-38) இரவே எனக்குக் கடைசி முடிவு என்று நான் நினைத்து விட்டேன். ஆனால் அப்படி ஒன்றும் நேர்ந்து விடாததுபற்றி அதிசயப்படுகிறேன். எனது முடிவு விரைவாகவே வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். அதை நான் வரவேற்கிறேன். என்து தேக நிலையும் அதற்கு ஏற்பவே இருக்கிறது. எனது உற்றார்களும் உயிர் நண்பர்களும் என்னைப்பற்றி கவலைப்பட்டு வருந்தாதிருக்கும் படி மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

வெற்றி நமதே "தமிழ் வாழ்க" "ஹிந்தி வீழ்க"

இப்படிக்குத் தமிழன்,

**K. N. ஸ்டாலின் ஜெகதீஸ்.**

5—6—38.

## காண்டன்மீ...

### ஜப்பானியர்...

### ஆகாயத்...

### சேதம்...

### 5-வது முறை...

காண்டன், ஜூன் 3

இன்று பிற்பகலில் 8 ஜப்பானிய யுத்த விமானங்கள் காண்டனைத்தாக்கி நகரத்தில் பலபாகங்கள் மீதும் அரைமணி நேரத்திற்கு வெடிகுண்டுகளைப் பொழிந்தன.

டெய்ஷாடோ ஸ்டேஷன் அருகாமையில் குண்டுகள் வெடிக்கும் சப்தம் கேட்டது

ஷிஸ்டேஷனில் தான் ஓடிவந்த ஆயிரக்கணக்கான பேர் ஹாங்காங்குக்கு அனுப்பப்பட காத்துக் கொண்டிருந்தனர்.

சேதம் ஏராளமாக ஏற்பட்டிருக்கும் என்று ஊகிக்கப்படு...

### சென்னை முத்தியாலுப்பேட்டை ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

(நமது நிருபர்)

சென்னை, ஜூன். 5,

நேற்று (5-6-38) மாலை முத்தியாலுப்பேட்டையில் கூடிய ஹிந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பெருந்திரளான ஜனங்கள் கூடியிருந்தார்கள், தலைவர்கள் சி. டி. நாயகம், சண்முகானந்த சுவாமி, தோழர் பல்லடம் பொன்னுச்சாமி இவர்கள் கைது செய்யப்பட்ட செய்தி தெரிந்தபடியால் ஜனங்கள் முன்னைவிட அதிகமான ஊக்கமும், உறுதியும் கொண்டு திரண்டு வந்திருந்தார்கள். முஸ்லிம் சகோதரர்கள் அதிகம் பேர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. தோழர் மீனாம்பாள் சிவராஜ் அம்மாள் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர்கள் ஈ வெ. ரா. கே. ஏ. பி. விஸ்வநாதம், கே. எம். பால சுப்பிரமணியம் ஆகிய இவர்கள் நெடுநேரம் பேசினார்கள். கூட்டத்தில் ஊக்கமும் உற்சாகமும் காணப்பட்டது. இரவு பத்து மணிக்கு தோழர் மாணிக்க வாசகம் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது. தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் (36-வது நாள் பட்டினி) தமது உடல் நிலையையும் பாராமல் காரில் வந்து சற்று நேரம் இருந்துவிட்டுச் சென்றார். தலைவர்கள் கைது செய்யப்பட்டதும ஜாமீனில் விடப்பட்டதும் ஜனங்களுக்கு மேன்மேலும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்து வருவது இந்தக் கூட்டத்திற்குப் பெருந்திரளான ஜனங்கள் வந்திருந்ததைக்கொண்டு அறியக் கிடக்கிறது.

### அருப்புக்கோட்டை தொண்டர்கள் சென்னை பயணம்

(நமது நிருபர்)

அருப்புக்கோட்டை, ஜூன், 4

சென்னையில் தலைவர்கள்

பிறகு தலைவர் அவர்களால் முடிவுரை கூற கூட்டம் இரவு 10 மணிக்கு முடிந்தது. இந்துக்களும் முஸ்லிம்களும் திரண்டு ஒற்றுமையாகக் கூடியிருந்ததும் கூட்டத்தில் கலகம் நடக்காவண்ணம் முஸ்லிம்களும் முன்னின்று ஆர்வத்தோடு கூட்டத்தை நடத்தியது போற்றத்தக்கதும், குறிப்பிடத்தக்கது மாகும். நகரமக்கள் காங்கரஸ்காரர் நடந்துகொண்ட முறையை இகழ்வதாகவும் காங்கரஸ் மோகமும் குறைந்திருப்பதாகவும் பேசிக் கொள்கிறார்கள்.